





**We Shine Academy**™

guiding you to get through

# நடப்பு நிகழ்வுகள்
# (CURRENT AFFAIRS)

## OCTOBER

*We Are Here..!! To Guide You..!!*







# We Shine Study Circle

# TNPSC

## நடப்பு நிகழ்வுகள்

## (CURRENT AFFAIRS)

## அக்டோபர் - 21.10.2018

Main Office @

**Weshine Study Circle**
Chromepet, Chennai
Phone: 8939144344, 8939244344

Branch Office @
**Weshine Study Circle**

Plot No: 47/60, "AK" Block,
7th Main Road, Anna Nagar
Chennai, Tamil Nadu – 600 040.

3rd Floor, West Wing, Gokul Arcarde,
No.2, Sardar Patel Road, Adyar
Chennai, Tamil Nadu – 600 020.

https://weshineacademy.com

# பொருளடக்கம்




- தமிழக நிகழ்வுகள்
- இந்திய நிகழ்வுகள்
- உலக நிகழ்வுகள்
- அறிவியல் & தொழில்நுட்பம்
- புத்தகங்கள்









The Best Coaching Institute For TNPSC, Bank, SSC, Police Exam, TET Exam, Railways Exams
8939 144 344

www.weshineacademy.com

## தமிழக நிகழ்வுகள்

- தமிழகத்தில் அரசு உதவி பெறும் பள்ளிகளில் மாணவர்களுக்கு ஸ்மார்ட் அடையாள அட்டையை வழங்கிய முதலாவது பள்ளியாக **போரூரைச் சேர்ந்த அரசு மேல்நிலைப் பள்ளி தேர்வாகியுள்ளது**.
    - இந்த அடையாள அட்டையானது மாணவர்களின் நுழைவு மற்றும் அவர்கள் வெளியே செல்வதை கண்காணிக்கவும், மாணவர்கள் வகுப்புகளை புறக்கணிக்கும் போது தலைமை ஆசிரியர் மற்றும் பெற்றோர்களை எச்சரிக்கை செய்யவும் உதவுகிறது.

## இந்திய நிகழ்வுகள்

- பாதுகாப்பான உணவை உண்ணுதல் மற்றும் ஆரோக்கியமாக இருத்தலைப் பற்றி மக்களுக்கு உணர்த்துவதை நோக்கமாகக் கொண்டு, மத்திய அரசானது **'ஸ்வச் பாரத் யாத்ரா' (Swachh Bharat Yatra)** என்ற தேசிய அளவிலான பிரச்சாரத்தை தொடங்கியுள்ளது.
    - இந்தப் பிரச்சாரமானது உலக உணவு தினமான அக்டோபர் 16 அன்று, மாநிலங்களுடன் இணைந்து இந்திய உணவுப் பாதுகாப்பு மற்றும் தரநிலைகள் ஆணையத்தினால் **(Food Safety and Standards Authority of India – FSSAI)** தலைமை தாங்கி நடத்தப்படுகிறது.

- இமயமலையில் உள்ள கங்கோத்திரி பனிமுகடு பகுதியில் **6557 மீ, 6566 மீ, 6160 மீ, 6100 மீ** உயரங்களில் உள்ள 4 சிகரங்களுக்கு மறைந்த முன்னாள் **பிரதமர் அடல் பிகாரி வாஜ்பாயின்** பெயர் சூட்டப்பட்டுள்ளது.
    - அந்த சிகரங்களுக்கு முறையே அடல் - 1, அடல் - 2, அடல் - 3, அடல் - 4, என்று பெயர்கள் சூட்டப்பட்டுள்ளது.

## உலக நிகழ்வுகள்

- **இந்தியப் பெருங்கடல் மீதான இரண்டு நாள் சர்வதேச மாநாடு (International Conference on Indian Ocean)** இலங்கையின் கொழும்புவில் நடைபெற்றது.
    - இந்த மாநாட்டின் கருத்துருவானது **"இந்தியப் பெருங்கடல் : நமது எதிர்காலத்தை வரையறுக்கும்" (The Indian Ocean : Defining our Future)** என்பதாகும்.

- **சீனா - ஹாங்காங்** இடையே போக்குவரத்தை எளிமைப்படுத்தும் விதமாக வரும் அக்டோபர் 24ம் தேதி **ஜுகாய் - மகோ பாலம்** திறக்கப்பட உள்ளது. 55 கி.மீ. நீளம் கொண்ட இந்த பாலம் உலகின் நீளமான பாலமாகக் கருதப்படுகிறது.
    - இதன் மூலம் **ஹாங்காங் - ஜுகாய்** இடையேயான பயண நேரம் 3 மணி நேரத்திலிருந்து வெறும் 30 நிமிடங்களாக குறைகிறது. இந்தப் பாலம் 2009 ஆம் ஆண்டு கட்டத் தொடங்கியது என்பது குறிப்பிடத்தக்கது.

## அறிவியல் மற்றும் தொழில்நுட்பம்

- பயிர்க் கதிர்கள் எரிக்கப்படுவதைத் தடுப்பதற்காக 3 கைப்பேசி செயலிகளை பஞ்சாப் மாநில அரசு அறிமுகப்படுத்தியுள்ளது.
    1. **i-khet (ஐ-கெட்)** – மெஷின் - (உள்ள இடத்திலேயே பயிர்க்கழிவு மேலாண்மை
    2. **e-PEHal (இ-பெஹால்)** – (மரம் நடுதலை கண்காணிக்க)
    3. **e-prevant (இ-பிரிவண்ட்)** – பயிர்க் கதிர்கள் எரிக்கப்படும் சம்பவங்கள் குறித்த தகவல்கள்.
- இந்த மூன்று ஆண்ட்ராய்டு செயலிகளும் பஞ்சாப் தொலையுணர் மையத்தால் **(PRSC – Punjab Remote Sensing Centre)** உருவாக்கப்பட்டன.



We Shine Academy

- புதன் கிரகத்தை ஆய்வு செய்வதற்காக **ஐரோப்பிய மற்றும் ஜப்பானிய** விண்வெளி ஆய்வு மையங்கள் இணைந்து உருவாக்கிய **"பெபிகொலம்போ" BepiColombo** விண்கலம் அக்டோபர் 20 அன்று வெற்றிகரமாக விண்ணில் செலுத்தப்பட்டது.
  - அந்த விண்கலமானது சுமார் **7 ஆண்டுகள்** பயணித்து புதன் கிரகத்தை நெருங்கும் எனக் கூறப்படுகிறது.

- வானிலும், நீரிலும் செலுத்தக்கூடிய உலகின் மிகப்பெரிய விமானமான **ஏஜி-600 (AG-600)-ஐ சீனா-வானது** அக்டோபர் 20 அன்று வெற்றிகரமாக சோதனை ஓட்டத்தை நிறைவு செய்துள்ளது.
  - இந்த விமானமானது சீன அரசினால் முழுவதும் உள்நாட்டிலேயே தயாரிக்கப்பட்டுள்ளது.

## புத்தகங்கள்

- **இந்திய கட்டிடத் துறையில் புதுமையான** அமைப்புகள் மற்றும் கட்டுமான நுட்பங்களை பயன்படுத்துவதில் முன்னோடியாக இருந்த அனுமோலு ராமகிருஷ்ணனின் சுயசரிதையான **'பில்டிங் எ லெகஸி' (Building a Legacy)** என்னும் புத்தகத்தை குடியரசு துணைத் தலைவர் வெளியிட்டுள்ளார்.
  - இப்புத்தகமானது பட்டயக் கணக்கரான **V. பட்டாபி ராம்** என்பவரால் எழுதப்பட்டது.



WeShine Academy